5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஓஓ) தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 54 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 54 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 10-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2002 மே 10] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கல்வி அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.*

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 ஆம் ஆண்டு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2000) என்பதற்குப் பதிலாக, "2002 ஆம் ஆண்டு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002)" என்னும் திருத்தத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2002 ஆம் ஆண்டு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்”
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

8. அரசினர் தனித் தீர்மானம்

கால்நடை மருத்துவப் பயிற்சி, தொழில் ஆற்றுவதை முறைப்படுத்துதல் மற்றும் அதுதொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளுக்கும் இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தைக் கொண்டு வருதல்- 1984 ஆம் ஆண்டு இந்தியக் கால்நடை மருத்துவமன்றச் சட்டம் (மத்தியச் சட்டம் 52/1984) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கால்நடை மருத்துவப் பயிற்சியினையும் தொழில் ஆற்றுவதையும் முறைப்படுத்துவதற்கும் அது தொடர்பான அல்லது அதற்குத் துணையானதும் சார்பானதுமான அனைத்துப் பொருட்பாடுகளுக்கும் இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது என்று இந்தச் சட்டப் பேரவை கருதுகிறது என்பதாலும்,